# 24 சமய வாழ்க்கையும் சூழலும்.

ஆன்மாக்களைப் பக்குவப்படுத்துவது சமயம் ஆகும். சமயம் சமுதாயத்தில் ஒரு முக்கிய இடத்தைப் பெறுகிறது. சமுதாயத்தில் தனி மனிதனின் வாழ்க்கை நெறியே சமயம் என்றழைக்கப்படுகிறது. குறிக்கோளடிப்படையில் மக்களைப் பக்குவப்படுத்துகின்ற செயல் நிலையில் உயர்நிலை நோக்கிச் செலுத்துகிற சமய நிறுவனங்களாக திருக்கோயில்கள் அமைகின்றன.

இறைவனை இருத்தி மக்கள் வழிபடும் இடம் ‘‘கோயில்’’ எனவும், ‘‘ஆலயம்’’ எனவும் கூறப்படும். கோயில் என்பதில் இருபொருள் உண்டு. கோ+இல், இதில் ‘‘கோ’’ என்பது நம்மை ஆளும் அரசன் எனவும், ‘‘இல்’’ என்பது அவன் வாழும் இடம், குடிகொண்ட பதி, திருப்பதி, மேலான இடம் எனவும் பொருள்படும். மற்றொன்று ‘‘கோ’’ என்பது எல்லா உலகங்களையும் ஆண்டு கொள்ளும் ஆண்டவன் எனவும் ‘‘இல்’’ என்பது அவன் எங்கும் நிறைந்தவனானாலும் அவன் இருக்குமிடம் ஒன்று எனவும் வரும் எனக் கோயில் குறித்து விளக்குவர். ‘‘ஆலயம்’’ என்ற சொல்லில் ‘‘ஆ’’ என்பது ஆன்மா எனவும், ‘‘லயம்’’ என்பது லயிப்பது அல்லது சேர்வதற்கு உரியது எனவும் பொருள்படும். ஆகவே, ‘‘ஆ + லயம் = ஆலயம்’’ எனப்படுகிறது. கடவுள் திருவடியில் மனம் என்னும் ஆன்மா லயித்து இருத்தல் என்பதாகும் என ஆலயம் பற்றி விளக்குவர்.

கோயில், ஆலயம் குறித்த விளக்கங்களில் இறைவன் இருக்குமிடம் அவ் இறைவனை உயிர்கள் சென்று தொடர்பு கொள்ளும் இடம் என அவற்றைப் பொதுவாக விளங்கிக் கொள்ளலாம். அக்கோயிலுக்கும் மக்களுக்கும் உள்ள தொடர்பிலான செயற்பாடுகள் தெய்வத்தை நோக்கிய வழிபாட்டுச் செயற்பாடுகளாக அறியப்பட்டன. கோயில் கட்டுதல், மண்டபம் அமைத்தல், கலை வெளிப்பாடுகள் முதலியவற்றையும் தொண்டு என்ற வகையில் வழிபாட்டின் அடிப்படையாகவே செய்துள்ளனர்.

கோயிலைத் தூய்மை செய்தல், வழிபடும் மக்களுக்குரியன செய்தல், பாடல் பாடுதல், கலை வெளிப்பாடுகள் மூலம் பணி செய்தல் போன்றனவும் வழிபாட்டிற்குகந்த செயல்களாகவே கொள்ளப்படுகின்றன. இறைவனை வணங்குதலில் பூசை வழிபாடு, நீராட்டு, மலர் வழிபாடு, மாலை அணிவித்தல், தீப வழிபாடு என்பனவும் வணங்கும் முறைகளில் அமைகின்றன.

கோயிலின் அடிப்படையாக வலியுறுத்தப்படும் விதிமுறைகளும், கோயிலில் நிறைவேற்றப்படும் செயல் முறைகளும் குடிமக்களை தழுவிய கோயிலின் அடிப்படைகளாகின்றன. அவ்வகை முறைகளிலேயே மன்னர்கள் கோயில்களை அமைத்துள்ளனர்.

ஆலயங்கள் அமைப்பு முறையால் கலைகளின் இருப்பிடமாகவும் விழாக்களால் மக்கள் வேறுபாடுகளைக் களையும் இடமாகவும், காணிக்கைகளால் பொருளாதாரத்தின் வைப்பிடமாகவும், நீர், மரம் போன்றவற்றைப் பேணுவதினால் சுகாதாரத்தை வலியுறுத்தும் இடமாகவும், கல்வெட்டுக்கள் மூலம் வரலாற்றை அறிவுறுத்தும் இடமாகவும் வரலாற்றை அறிவுறுத்துவனவாகவும் திகழ்வதால் கோயில்கள் ஊரைச் சார்ந்தனவாக, ஊருக்குச் சார்பிடமாகத் திகழ்கின்றன என்றும் அதனாலேயே ‘‘கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்’’ என்னும் மொழி அமைந்தது எனவும் விளக்குவர்.

கோயிலை அலகிடுதல் (பெருக்குதல்), திருமெழுக்கிடுதல் (மெழுகுதல்) நந்தவனம் வைத்தல், மலர் எடுத்தல், மாலை தொடுத்தல், தூபம் இடுதல், திருவிளக்கு ஏற்றுதல், பூசைப் பொருள் கொடுத்தல் முதலியன தொண்டுகளாகக் கூறப்படும்.

## திருத்தலங்களைத் தூய்மையாக்கல்.

‘‘என் கடன்பணி செய்து கிடப்பதே’’ என்ற எண்ணத்தோடு வாழ்ந்தவர் திருநாவுக்கரசர். அடியார்களிலேயே நீண்ட நாள் வாழ்ந்தவர். சமண சமயத்தில் இருந்த அவரை இறைவன் சூலை நோய் கொடுத்து மீண்டும் சைவத்திற்குக் கொணர்ந்தது அனைவரும் அறிந்ததேயாகும். சமூகப் பணி செய்தவர்களில் தலைமையிடத்தைப் பிடித்திருப்பவர் திருநாவுக்கரசரேயாவார். செல்லும் இடமெல்லாம் இறைவன் குடிகொண்டிருக்கும் தலங்கள் தூய்மையுடன் இருக்க வேண்டும் என எண்ணினார். எனவே உழவாரப்படை கொண்டு திருக்கோயில்களைச் சீர் செய்தார். ஒவ்வொரு தலமாகச் சென்று இப்பணியைச் செம்மையுறச் செய்வதே இவரது கடமை என்பதால்தான் என் கடன் பணி செய்து கிடப்பதே எனப் பாடுகிறார். இறைவனைத் தேடி கோயிலுக்கு வரும் பக்தர்கள் எவ்விதத்திலும் பாதிக்கப்படக் கூடாது என்பதற்காகவும், அங்கேயே தங்கும் அடியார்கள் தொல்லைகள் இன்றி இருக்கவும் நாவுக்கரசரின் பணி உதவுவதாக இருந்தது.

## நீர்நிலைகளைப் பாதுகாத்தல்.

மனித வாழ்க்கைக்குத் தண்ணீர் இன்றியமையாதது. இதனையே, ‘‘நீரின்று அமையாது உலகு’’ என்று திருவள்ளுவர் கூறுகிறார். திருக்கோயிலினின்றும் பிரிக்கப்படாது உடனிருந்து இயங்குவது தீர்த்தம். அதாவது திருக்குளம் ஆகும். தீர்த்தத்தை சார்ந்தே திருக்கோயில் விளங்குகிறது எனலாம். திருக்கோயில்களைச் சார்ந்து மிக அகலமாகவும் ஆழமாகவும் எழிலுற அமைந்துள்ள திருக்குளங்களைக் காணும் பொழுதெல்லாம் நமது சமுதாய முன்னோடிகள் சமுதாய அமைப்பை நிர்மாணித்த திறன் நமக்குப் புலப்படுகிறது.

ஆற்றங்கரைகளிலும் பெரிய திருக்குளங்களின் கரைகளிலும் திருக்கோயில்கள் அமைக்கப்பெற்றன. இந்தத் திருக்குளங்களைப் பாதுகாத்தல், தூய்மையாகப் பேணுதல் திருக்கோயில்களின் கடமையாக இருந்தது. மானிடர் உடல் வெப்பம் தணியத் தீர்த்தத்தில் மூழ்கினர். ஆன்மாவைப் பற்றி நிற்கும் ஆணவ வெப்பம் தணிய இறைவனின் திருவருட்புனலில் மூழ்கினர். இத்தகைய திருக்கோயில்களின் திருக்குளங்களை நாயன்மார்கள் அவ்வப்பொழுது தூர்வையெடுத்துத் தூய்மைப்படுத்திப் பாதுகாத்து வந்துள்ளனர்.

எடுத்துக்காட்டாக, பிறவியிலேயே கண் தெரியாதவராகப் பிறந்த தண்டியடிகளின் பணி மிகவும் போற்றத்தக்க ஒன்றாகும். சமணர்கள் இவருக்குப் பல்வேறு இன்னல்களைச் செய்தனர். இந்நிலையிலும் திருவாரூரில் குளம் தோண்டும் பணியைச் செய்து தூய்மையான நீர் கிடைக்க வழி செய்தவர் தண்டியடிகளாவர்.

## தாகம் தணித்தல்.

இன்று இருக்கும் சாலை மற்றும் போக்குவரத்து வசதிகள் அக்காலத்தில் இல்லை. கால்நடையாகவே செல்லும் மக்களின் களைப்பு நீங்க, நிழல் தரும் மரங்களுடன் தண்ணீர் பந்தலும் இருந்தால் பயணம் சிறப்பாக அமையும். இந்த எண்ணத்துடன் தண்ணீர்ப் பந்தல் அமைத்த அடியார்களைப் பெரியபுராணத்தில் காணமுடிகிறது. உணவு படைத்து அடியார்களின் பசியைப் போக்கியதோடு, அவ்வடியார்களின் நீர் வேட்கையையும் போக்கினார் அப்பூதியடிகள். அதுவும் தனது பெயரில் அமைக்காமல் நாவுக்கரசர் பெயரில் தண்ணீர்ப் பந்தல் வைத்துள்ளார். தலந்தோறும் செல்லும் நாவுக்கரசர் அப்பூதியடிகள் அமைத்திருந்த நீர்ப்பந்தலுக்கு வருகிறார். இதனைச் சேக்கிழார்,

''அளவில்சனஞ் செலவொழியா வழிக்கரையில் அருளுடையார்
உளமனைய தண்ணளித்தாய் உறுவேனிற் பரிவகற்றிக்
குளம்நிறைந்த நீர்த்தடம்போல் குளிர்தூங்கும் பரப்பினதாய்
வளமருவும் நிழல்தருதண்ணீர்ப்பந்தல் வந்தணைந்தார்''

எனக் காட்டுகின்றார்.

தண்ணீர்ப்பந்தல் அமைக்கும் பொழுது, நல்ல நிழல் தரும் மரத்தின் கீழ் அமைத்தால்தான் நன்றாக இருக்கும் என்ற நடைமுறை உண்மையைத் தெளிவாகக் குறிப்பிடுகிறார் ஆசிரியர்.

நாவுக்கரசரும் அறச்சாலையும், தண்ணீர்ப்பந்தலும் வைத்திருந்ததை வரலாற்றின் மூலமாக அறியமுடிகிறது. அதனை ''ஆசில் அறச்சாலைகளும் தண்ணீர்பந்தலும் அமைத்தார்'' என்ற பெரியபுராணப் பாடல் அடி உணர்த்துகிறது.

## பசிப்பிணி போக்குதல்.

இருப்பவர்கள் இல்லாதவர்களுக்குக் கொடுத்து உதவும் பண்புடையவர்களாக இருக்க வேண்டும். இல்லையென்றால் ஒரு கால கட்டத்தில் இல்லாதவர்கள் இருப்பவர்களிடம் தட்டிப்பறிக்கும் நிலை ஏற்பட்டுவிடும். இதற்கெல்லாம் இடம் கொடுக்காமல், ஒருவருக்கொருவர் கொடுத்துதவுவதோடு, இல்லாதவர்களுக்கு இருப்பவர்கள் ஆதரவாகவும் இருந்திருக்கிறார்கள் என்பது பெரியபுராணம் காட்டும் சமுதாயமாகும். இல்லத்திற்கு வந்த அடியார்களுக்கு உணவு படைத்து விருந்து செய்தது மட்டுமல்லாமல், மடங்கள் அமைத்தும் உணவளித்தும் பசிப்பிணியைப் போக்கியிருக்கிறார்கள்.

ஒரு முறை வானம் பொய்த்ததால் திருவீழிமிழலையில் பஞ்சமும் பட்டினியும் தலைவிரித்தாடின அக்கால கட்டத்தில் அங்கு வந்திருந்த திருநாவுக்கரசரும், ஞானசம்பந்தரும் இறைவனிடம் படிக்காசு பெற்று அவர்களுடைய மடங்களிலிருந்து உணவு வழங்கி அடியார்களின் பசியைப் போக்கினார்கள். இதனை,

நாவினுக்கு வேந்தர்திரு மடத்தில் தொண்டர்
நாள்கூறு திருவமுது செய்யக் கண்டு
சேஉகைத்தார் அருள்பெற்ற பிள்ளை யார்தம்
திருமடத்தில் அமுதுஆக்கு வாரை நோக்கித்
தீவினைக்கு நீர்என்றும் அடைவி லாதீர்
திருவமுது காலத்தால் ஆக்கி இங்கு
மேவுமிக்க அடியவர்க்கு அளியா வண்ணம்
விளைந்தவாறு என்கோலோ விளம்பும் என்றார்''

என்ற பெரியபுராண பாடல் மூலம் அறியமுடிகிறது.

## நந்தவனம் அமைத்தல்.

திருப்புகலூரில் வாழ்ந்த முருகநாயனார் நந்தவனம் அமைத்து அதில் பூக்கும் பூக்களை இறைவனுக்கு தினமும் கொடுத்து வந்தார். அவர் நந்தவனத்தில் கோட்டுப்பூ, கொடிப்பூ, நீர்ப்பூ, நிலப்பூ என்னும் நான்கு வகைப்பூக்கள் இருந்தன. நாயனார் அப்பூக்களைக் கொய்து மாலை தொடுத்து அவ்வூரில் உள்ள ஆலய இறைவனுக்கு சாத்தி வழிபட்டு வந்தார். இதே போன்று ஆண்டாளும் தமது இல்லத்தமைந்த நந்தவனத்திலிருந்து துளசித் தளிர்களைக் கொண்டு மாலை தொடுத்து திருமாலை வழிபட்டார். இந்த அடிப்படையிலேயே இன்றும் கோயில்களில் நந்தவனம் அமைக்கப்பட்டு பூக்கள் ஆலயத்தில் நடைபெறும் பூசைகளுக்காகப் பயன்படுத்தப்படுகின்றன. நந்தவனம் அமைப்பதன் மூலம் ஆலயத்தில் பூசைக்குரிய மலர்கள் கிடைப்பது மட்டுமல்லாமல் சூழலும் மாசடையாமல் பாதுகாக்க உதவுகிறது.

இவ்வாறாக நாயன்மார்கள் சமயத்தொண்டு மட்டுமல்லாமல் சமூகத் தொண்டும் செய்து சமய வாழ்க்கையையும் போற்றி வாழ்ந்தவர்கள் என்பதை உணரமுடிகின்றது.

## மேல்வரும் வினாக்களுக்கு விடை தருக

1. திருக்கோயில் திருத்தொண்டுகள் மூன்று தருக.
2. அடியார்களுக்குச் செய்யும் திருத்தொண்டுகள் மூன்று தருக.
3. திருக்கோயில் திருத்தொண்டு செய்த நாயன்மார் இருவரைக் கூறுக.
4. அடியவர்களுக்குத் திருத்தொண்டு செய்த நாயன்மார் இருவரைக் கூறுக.
5. திருநாவுக்கரசர் பெயரில் சமூகத்திற்குத் தொண்டு செய்த அடியவர் யார்?

## செயற்பாடு

01) நாயன்மாரை திருக்கோயில் தொண்டு புரிந்தோர், சமூகத்திற்குத் தொண்டு புரிந்தோர் என அட்டவணைப்படுத்துக.

02) உங்கள் ஊரில் உள்ள திருக்கோவில் ஒன்றுக்கு உம்மால் செய்யப்பட்ட தொண்டுகளை அட்டவணை ஒன்றில் எழுதி வகுப்பறையில் காட்சிப்படுத்துக.

## பாடச்சுருக்கம்

- ஆலயங்களில் செய்யப்படும் தொண்டுகளாக திருக்கோயில்களைச் சுத்தம் செய்தல், நந்தவனம் அமைத்தல், குளம் வெட்டுதல், மாலை கட்டிக் கொடுத்தல், விளக்கேற்றுதல் என்பன அமைகின்றன.
- அடியவர்களுக்கு செய்யும் தொண்டுகளாக திருவமுதளித்தல், தாகம் தீர்த்தல் என்பன கூறப்படுகின்றன.
- அக்காலத்தில் மக்கள் இயற்கையோடு ஒன்றிய சமய சமூக வாழ்க்கையை வாழ்ந்து, நாமும் வாழ வேண்டும் என்பதனை வலியுறுத்தியுள்ளனர்.
- சமய வாழ்வின் அடிப்படையில் இனிமையான ஒரு சமூக வாழ்வியலை நம் முன்னோர்கள் கண்டுள்ளனர்.